**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 73** **நாள் : 09.04.2025**

**மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை அருகில் ரூ.44.70 இலட்சம் மதிப்பில் 2 புதிய பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.**

மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு. மா.சுப்பிரமணியன் அவர்கள், இன்று (09.04.2025) சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி, அடையாறு மண்டலம், வார்டு-168, கத்திப்பாரா சாலையில் உள்ள கலைஞர் நூற்றாண்டு உயர் சிறப்பு மருத்துவமனை அருகில் இருபுறமும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்ட நிதியின் கீழ், ரூ.44.70 இலட்சம் மதிப்பில் 2 புதிய பேருந்து நிழற்குடைகள் அமைக்கும் பணியினை அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள், கத்திப்பாரா சாலைப் பகுதிகளில் மூலதன நிதிகளின் கீழ், ரூ.5.53 கோடி மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணியினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு பணியினை விரைந்து முடித்திட அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சிகளில், மதிப்பிற்குரிய துணை மேயர் திரு. மு. மகேஷ் குமார், துணை ஆணையாளர் (பணிகள்) திரு. வி. சிவகிருஷ்ணமூர்த்தி, இ.ஆ.ப., தெற்கு வட்டார துணை ஆணையாளர் திரு. எம். பி. அமித், இ.ஆ.ப., மண்டலக்குழுத் தலைவர்கள் திரு. ஆர். துரைராஜ், திரு. எம். கிருஷ்ணமூர்த்தி, மாமன்ற உறுப்பினர் திரு. மோகன்குமார் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்**
**பெருநகர சென்னை மாநகராட்சி**